[Mr. Speaker] [7th September 1960

enthusiastic and happy over the fact that many friends here, some of whom are older than me, are wishing me well. I am grateful to you all for the expression of felicitation that you have offered to me. Let me pray to God to give me strength to fulfil your expectations and do what I can to this House, to this country and to this Nation. Thank you.

II.—POINT OF INFORMATION *re* PRIVILEGE OF THE HOUSE.

SRI N. R. THIAGARAJAN: ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், சபையில் கேள்விகள் ஆரம்பிப்பதற்கு முன்பு நான் ஒன்று தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று நம்முடைய சபையின் அஜெண்டாவிலுள்ள விஷயங்களை விவாதிப்பதற்கு ஹை கோர்ட் உத்தரவிட்டிருக்கிறதா? அவர்கள் அனுமதி பெற்றுத்தான் விவாதிக்க வேண்டுமா? இந்தச் சபையில் கனம் அங்கத்தினர்களுக்கு பேச உரிமை இருக்கிறது. இந்தச் சபையின் கனம் அங்கத்தினர்களில் ஒருவருக்கு, கோர்ட்டுக்கு வரும்படி நோட்டீஸ் வந்திருக்கிறது. அதைக் கவனிக்க சபா நாயகருக்கு உரிமை இருக்கிறதல்லவா? சபாநாயகருக்கே நோட்டீஸ் வந்திருப்பதாகத் தெரிகிறது. எதைக் கவனிக்கலாம், எதைக் கவனிக்கக் கூடாது என்பதற்கு நம்முடைய சபைக்கு உரிமை இருக்கிறதா என்று தீர்மானிக்கவேண்டும்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர்களில் யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டு, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமானால், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் கேட்க வேண்டும். கேள்வி நேரத்திற்கு முன்பு கேட்கக்கூடாது. கேள்வி நேரம் முடிந்த பிறகு ஏதாவது கேட்கவேண்டுமானால் கேளுங்கள். இப்பொழுது தயவு செய்து உட்காருங்கள். சபையின் உரிமை, கௌரவம் இவைகளை என்னால் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN: கேள்வி நேரத்தையாவது அவர்கள் அனுமதித்திருக்கிறார்களா?

MR. SPEAKER: கேள்வி நேரத்தை அனுமதிக்க யாருடைய அனுமதியும் எனக்கு வேண்டியதில்லை என்றுதான் நான் சொல்லக்கூடும். யாரும் என்னை நிறுத்தவில்லை. கேள்வி நேரத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, எனக்கு அந்த உரிமை இருக்கிறது என்று தான் அர்த்தம்.

III.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Canal (Kangianur)

* 486 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காங்கேயனூர், போளூர், காப்பலூர், ஏரிகளுக்குப் போகும் கால்வாயை மராமத்து செய்யக் கோரி எஸ். எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ.-யிடமிருந்து கடித எண் S. M. A./F-5/Vol. III/14 தேதி 1959-ம் வருடம் அக்டோபர் மாதம் 9-ந்தேதி சர்க்காருக்குக் கிடைத்ததா?

(ஆ) அப்படியானால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter was examined by the Government in consultation with the Collector of North Arcot and the Board of Revenue. The Executive Engineer, Public Works Department, Vellore, has been directed by the Collector of North Arcot to investigate measures to draw water into the Polur supply channel without the ryots having to resort to put up korambu and to attend to silt-clearance in the supply channel.

MR. SPEAKER : Today we have got 46 questions. I would like to have the co-operation of all hon. Members in disposing of all the questions early.

SRI S. M. ANNAMALAI : செய்யாற்றில் தண்ணீர் வரும்போதெல்லாம் அங்கே அணைக்கட்டு இல்லாத காரணத்தால் கால்வாயில் தண்ணீர் வராமல் தடைப்படுகிறது. மணல் அதிகமாகச் சேர்ந்து கால்வாயில் தண்ணீர் வருவது கிடையாது என்ற காரணத்தையொட்டி அதில் ஒரு அணைக்கட்டு கட்ட சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு விடையளித்ததைப்போல், அதே விஷயத்தைப்பற்றித்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

Pay (Police officers)

* 487 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to remove the difference in the scales of pay of Police Officers and that of Fire Service Personnel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. The scale of pay of the various posts in the Fire Service Department were considered with due regard to the general principles followed